सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

**யாழ்ப்பாணம்**

*ஊடக அறிக்கை*

***இந்தியாவில் தொழில்நுட்பக்கற்கைகளுக்கு புகழ் பெற்ற நிறுவனமாகிய IIT யில் கற்பதற்கான வாய்ப்புகள் பற்றிய கலந்துரையாடல்.***

இந்திய அரசானது, இந்தியாவில் தொழில்நுட்பக்கற்கைகளுக்கு புகழ் பெற்ற நிறுவனமாகிய Indian Institutes of Technology (IITs)யில் திறமைமிக்க இலங்கையைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களை 2017-18 கல்வி ஆண்டிலிருந்து ஏற்படுத்திக் கொடுக்க முடிவு செய்துள்ளது.

இது சம்பந்தமாக Indian Institutes of Technology (IIT) யின் விரிவுரையாளர்கள் அடங்கிய வளவாளர்கள் குழு ஒன்று செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் மாணவர்களுடனான கலந்துரையாடலை நடாத்தவுள்ளது. இதில் இலங்கையில் உயர்தர பரீட்சைக்கு தோற்றிய / தோற்றவுள்ள மாணவர்கள் அவர்களின் பெற்றோர்கள், பொறியியல் பீடங்களில் இறுதி மற்றும் மூன்றாம் வருடங்களில் கல்விபயிலும் மாணவர்கள் கலந்து பயன்பெறமுடியும். இக் கலந்துரையாடல்களில் பொறியியலில் இளமாணி மற்றும் முதுமாணிக் கற்கைகளுக்கான நுழைவுத் தேர்வுகள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் இக்கலந்துரையாடல் எதிர்வரும் **செப்ரெம்பர் மாதம் 7ம் திகதி புதன்கிழமை** அன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் கலந்து பயன்பெறவள்ளவர்கள் தங்களது பெயர், கல்வித்தகுதி, எதிர்பார்க்கும் கல்வி நிலை இளமாணி கற்கைகளா? முதுமாணி கற்கைகளா?, தொலைபேசி இலக்கம் முதலியவற்றை குறிப்பிட்டு cgi.jaffna@gmail எனும் மின்னஞ்சல் முகவரிக்கு **செப்ரெம்பர் 4ம் திகதி காலை 9.00 மணிக்கு முன்னதாக** அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை எனும் அடிப்படையில் கலந்துரையாடலில் பங்கு கொள்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும். கலந்துரையாடல் இடம்பெறும் இடம் மற்றும் நேரம் என்பவை பதிவுகளை மேற்கொண்ட மாணவர்களுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

*30 ஆகஸ்ட் 2016*
*யாழ்ப்பாணம்*